[1986 நவம்பர் 25

கழகங்களுக்கும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே ஆணையிடப்பட்டிருக்கின்றது. வட்ட அளவிலே விளையாட்டு மையங்களைப் படிப்படியாக அமைக்க அரசு நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஹேமசந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களில் பலர் வேலைத் தேடித் தரும் ஸ்தாபனங்களில் பதிவு செய்து 10 ஆண்டுகள் வரை காத்திருந்தும், இன்றைக்கு வயது வரம்பைத் தாண்டிவிட்ட காரணத்தால் அவர்களுக்கு வேலை கிடைக்காத நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க, பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில், வயது வரம்பைத் தளர்த்தி, அதாவது எக்ஸெம்ஷன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விளம்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அது குறித்துப் பரிசீலிக்கும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த விளையாட்டு வீரர்களாக இருக்கின்ற காரணத்தால், அத்தகைய மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டமுடியவில்லை. ஆகவே, அத்தகைய மாணவர்களுக்கு தேர்வில் குறைந்த மதிப்பெண்கள் எடுத்திருந்தாலும், தேர்வு செய்துவிடலாம் என்பதை அரசு பரிசிலிக்குமா? வெளிநாடுகளில் இதுபோன்ற முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரபஷனல் கோர்சஸ், மேல்படிப்புக்கு அதாவது என்ஜினியரிங், மெடிகல், பி.எஸ்.ஸி., (அக்ரி., பி.வி.எஸ்.ஸி., பி.டி.எஸ்., ஆகியவைகளுக்கு ஏற்கனவே இந்தச் சலுகை தரப்படுகிறது. மேலும் விளையாட்டு வீரர்களுக்கு இத்தகைய ஒதுக்கீட்டைத் தருவதற்கு அரசு ஆயும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பில் எத்தனை விழுக்காடு தரப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து தற்போது தகவல் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு வேண்டுகிறேன்.

என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு.

174—(*வினாஎண். 8637) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்கள் ஊதிய உயர்வு பற்றி அரசு ஏதும் திட்டமிட்டுள்ளதா?

1986 நவம்பர் 25]

(ஆ) ஆம் எனில், ஊதிய உயர்வு எந்த அடிப்படையில் வழங்க உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம்தான் (Honorarium) தரப்படுகிறது.

(ஆ) இந்த மதிப்பூதியத்தை கீழ்க்கண்டவாறு இரட்டிப்பாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

	முன்பு அளிக்கப் பட்ட விகிதம்.		1-4-1986-க்குப் பின்னர் அளிக்கப் படும் விகிதம்.	
முதுநிலை பிரிவு (Senior Division) மற்றும் மகளிர் பிரிவு முதுநிலை.				
மேஜர்	ரூ. 100	மாதந்தோறும்	ரூ. 200	மாதந்தோறும்
காப்டன்	ரூ. 90	,,	ரூ. 180	,,
லெப்டினட்	ரூ. 80	,,	ரூ. 160	,,
2 லெப்டினட்	ரூ. 75	,,	ரூ. 150	,,
இளநிலை பிரிவு (Junior Division) மற்றும் மகளிர் பிரிவு இளநிலை.				
தலைமை அதிகாரி	ரூ. 75	மாதந் தோறும்	ரூ. 150	மாதந் தோறும்
முதல் அதிகாரி	ரூ. 65	,,	ரூ. 130	,,
இரண்டாம் அதிகாரி	ரூ. 55	,,	ரூ. 110	,,
மூன்றாம் அதிகாரி	ரூ. 50	,,	ரூ. 100	,,

சேலம் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

175 —(*வினா எண் 9605) **திருமதி தா. இராசாம்பாள் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆத்தூரில் ஒன்றை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.